பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

28 01 2025 **TUESDAY** **6.45 AM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று, புவனேஷ்வரில் உலக முதலீடு மாநாடு மற்றும் டேராடூனில் 38-ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளை தொடங்கிவைக்கிறார்.
- ஆராய்ச்சி மற்றும் புதிய யோசனைகளை செயல்படுத்தாமல், உலகில் எந்த நாடும் முன்னேற முடியாது என்று மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.
- இந்தியா – ஓமன் இடையே இருதரப்பு வர்த்தக முதலீட்டு உறவுகளுக்கு புதிய உத்வேகம் ஏற்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- பட்டா பெறுவதில் உள்ள சிரமங்களை போக்கிடும் வகையில், நத்தம் பட்டாக்களையும் இணையவழியில் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு மதிவேந்தன் கூறியுள்ளார்.
- **Occitanie** ஓபன் டென்னிஸ் போட்டியின், ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் யுகி பாம்ரி – குரேஷியாவின் **Ivan Dodig** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<>>>>>**

பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று ஒடிஸா மற்றும் உத்தராகண்ட் மாநிலங்களுக்கு செல்கிறார்.

ஒடிஸா தலைநகர் புவனேஷ்வரில் இன்று காலை, **Utkarsh** ஒடிஸா என்ற பெயரில் நடைபெறவுள்ள உலக முதலீடு மாநாட்டை பிரதமர் தொடங்கிவைக்கிறார்.

ஐந்து லட்சம் கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட முதலீடுகளை ஈர்க்கும் நோக்கிலும், மூன்றரை லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை வழங்கும் வகையிலும் இரண்டு நாட்கள் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

தொடர்ந்து, இன்று மாலை உத்தராகண்ட் மாநிலம் டேராடூன் செல்லும் பிரதமர், 38-ஆவது தேசிய விளையாட்டுப்போட்டிகளை தொடங்கிவைக்கிறார்.

இதற்கிடையே, தமது பயணம் குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், ஒடிஸா மாநிலத்தின் வளர்ச்சிக்காகவும், நாட்டின் விளையாட்டு திறமைகளை அர்ப்பணிப்பதற்காகவும் தாம் இன்று அங்கு செல்லவிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

கடந்த பத்தாண்டுகளில் இளம் தலைமுறையினருக்கு ஏற்பட்ட பல்வேறு தடைகளை அரசு அகற்றியுள்ளதாகவும், இதன்மூலம் இளைஞர்களுக்கும் நாட்டிற்கும் பலம் அதிகரித்திருப்பதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<>>>>>

ஆராய்ச்சி மற்றும் புதிய யோசனைகளை செயல்படுத்தாமல், உலகில் எந்த நாடும் முன்னேற முடியாது என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லி தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில், நேற்று முதலாவது சர்வதேச ஒலிம்பிக் மாநாட்டை தொடங்கிவைத்து பேசிய அவர், இந்தியாவின் மாறிவரும் அம்சத்தை இந்த பல்கலைக்கழகம் பிரதிபலிப்பதாக கூறினார்.

உலக அளவில் முன்னேற்றமடைந்த நாடாக உருவாவதற்கு ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

<<<<<>>>>>

இந்தியா – ஓமன் இடையே இருதரப்பு வர்த்தக முதலீட்டு உறவுகளுக்கு புதிய உத்வேகம் ஏற்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

அரசு முறைப்பயணமாக ஓமன் சென்றுள்ள மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல், அந்நாட்டு வர்த்தக அமைச்சர் திரு **‘Qais Bin Mohammed Al Yousef ’** –ஐ சந்தித்து பேச்சு நடத்தினார்.

ஒருங்கிணைந்த பொருளாதார பங்களிப்பு ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தையின் முன்னேற்றம் குறித்து அப்போது விவாதித்ததாகவும், இருநாடுகளுக்கு இடையே வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகளை வலுப்படுத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இன்று தொடங்கவுள்ள கூட்டு ஆணைய கூட்டத்திற்கான முன்னேற்றமாக இந்த பேச்சுவார்த்தை அமைந்தது என்றும், மத்திய வர்த்தகத்துறையின் அறிக்கை தெரிவிக்கிறது.

இதனிடையே, மஸ்கட்டில் உள்ள இந்திய தூதரகம் சார்பில் நடைபெற்ற குடியரசு தின விழாவிலும் திரு பியூஷ் கோயல் கலந்துகொண்டார்.

இந்திய வம்சாவளியினர் உள்ளிட்டோர் இந்த விழாவில் கலந்துகொண்டனர்.

அப்போது, இருநாடுகளுக்கும் இடையே வளமான, பாரம்பரிய உறவுகளை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

<<<<<>>>>>

மருதமலை முருகன் கோவிலில் ஆசியாவிலேயே அதிக உயரம் கொண்ட முருகன் சிலை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

மருதமலை கோவிலில் நடைபெற்றுவரும் வளர்ச்சிப்பணிகள் மற்றும் சிலை அமைப்பது தொடர்பாக, நேற்று ஆய்வு மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

பழனி, திருச்செந்தூர், திருத்தணி உள்ளிட்ட ஏழு முருகன் கோவில்களில் பெருந்திட்டப்பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தைப்பூச நாளன்று முருகன் கோவில்களில் கூடுதலாக அன்னதானம் வழங்க அரசு முடிவு செய்திருப்பதாகவும், அது தொடர்பான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்றும் திரு சேகர்பாபு கூறினார்.

<<<<<>>>>>

பட்டா பெறுவதில் மக்களுக்கு உள்ள சிரமங்களை போக்கிடும் வகையில், நத்தம் பட்டாக்களையும் இணையவழியில் பெறுவதற்கான வழிவகை செய்யப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் 4 கோடியே 95 லட்சம் ரூபாய் மதிப்பில் 495 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களை வழங்கி பேசிய அவர், அதிகபட்சமாக ராசிபுரம் பகுதியில் 4 ஆயிரத்து 700-க்கும் மேற்பட்ட இலவச வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

கடந்த மூன்றாண்டுகளில் தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுவரை சாலை வசதியே இல்லாத போதமலை கிராமத்திற்கு 31 கிலோமீட்டர் தொலைவிற்கு சாலை அமைக்கும் பணி தொடங்கிவைக்கப்பட்டிருப்பதாகவும் திரு மதிவேந்தன் கூறினார்.

<<<<<>>>>>

பள்ளிக்கல்வித்துறையில் 47 ஆயிரம் தற்காலிக பணியிடங்களை நிரந்தரமாக்குவதற்கான அரசாணையை மாநில அரசு வெளியிட்டுள்ளது.

முதன்மை கல்வி அலுவலர், மெட்ரிக் பள்ளி ஆய்வாளர் உள்ளிட்ட 55 வகையான பணியிடங்களில் பத்தாண்டுகளுக்கு மேலாக தற்காலிகமாக பணியாற்றும் பணியாளர்களை நிரந்தரமாக்குவது தொடர்பாக அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இந்த ஆணை வெளியிடப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதில், 28 ஆயிரத்து 30 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் அடங்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

நீலகிரி மாவட்டத்தில் இருந்து கர்நாடக மாநிலத்திற்கு சரக்கு ஏற்றிசெல்லும் லாரிகளை காட்டு யானைகள் வழிமறிக்கும் சம்பவங்கள் தொடர்கதையாகி வருகின்றன.

முதுமலை – பந்திப்பூர் நெடுஞ்சாலையில் லாரிகளில் உள்ள உணவுப்பொருட்களை யானைகள் சேதப்படுத்தி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - சரவணன் - 30 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

## இருவரிச் செய்திகள்

இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நேத்தன்யாகு அடுத்த வாரம் அமெரிக்கா சென்று, அந்நாட்டு அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப்பை சந்திக்க திட்டமிட்டுள்ளார்.

<<<<<>>>>>

இந்தியாவும் - ஐக்கிய அரபு எமிரேட்ஸும் பரஸ்பர நம்பிக்கையுடன் தகவல்களை பகிர்ந்துகொள்வதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

இரண்டு நாள் பயணமாக சீனா சென்றுள்ள வெளியுறவுத்துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரி, பெய்ஜிங்கில் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு **'Wang Yi** –ஐ சந்தித்து பேசினார்.

<<<<<>>>>>

இந்திய விமானப்படையின் தாம்பரம் விமான தளத்தின் புதிய தலைவராக ஏர் கமோடர் தபன் சர்மா பொறுப்பேற்றுக்கொண்டார்.

<<<<<>>>>>

காஞ்சிபுரத்தில் நடைபெறவுள்ள புத்தக திருவிழா முன்னேற்பாட்டுப்பணிகள் குறித்து அம்மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தலைமையில் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

<<<<<>>>>>

திருப்பத்தூரில் மத்திய அரசின் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தில் இலவச தையல் பயிற்சி முடித்த மாற்றுத்திறனாளிகளுக்கு சான்றிதழ்கள் மற்றும் தையல் இயந்திரங்களை மாவட்ட ஆட்சியர் திரு தர்பகராஜ் வழங்கினார்.

<<<<<>>>>>

பள்ளி கல்லூரி மாணவர்கள் இடையே தற்கொலையை தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை குறித்த ஆய்வுக்கூட்டம் நாமக்கல் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரியில் மாவட்ட ஆட்சியர் திருமதி உமா தலைமையில் நடைபெற்றது.

**<<<<<>>>>>**

தைமாத பிரதோசத்தையொட்டி, கரூர் கல்யாண பசுபதீஸ்வரர் ஆலயத்தில் நந்தி பகவானுக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் பூஜைகள் நேற்று நடைபெற்றது.

**<<<<<>>>>>**

திருத்தணி முருகன் கோவிலில் கடந்த 25 நாட்களில் ஒரு கோடியே 19 லட்சம் ரூபாய் உண்டியல் காணிக்கை கிடைத்திருப்பதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

**<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

**Occitanie** ஓபன் டென்னிஸ் போட்டியின், ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் யுகி பாம்ரி – குரேஷியாவின் **Ivan Dodig** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

பிரான்ஸின் **Montpeller**–ல் நடைபெறும் இப்போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்றில், இந்த இணை 7-3, 3-6, 10-8 என்ற செட் கணக்கில், ஜெர்மனியின் **Mark Wallner – Jakob Schnaitter** இணையை வென்றது.

**<<<<<>>>>>**

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையே மூன்றாவது டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் இப்போட்டி, இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

ஐந்து போட்டிகளை கொண்ட இந்த தொடரில், இந்திய அணி ஏற்கனவே நடைபெற்ற இரண்டு ஆட்டங்களிலும் வெற்றிபெற்று முன்னிலையில் உள்ளது.

<<<<<>>>>>

19 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் உலகக்கோப்பை டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில் நடப்பு சாம்பியனான இந்தியா, சூப்பர் ஆறு சுற்றின் கடைசி ஆட்டத்தில் ஸ்காட்லாந்தை எதிர்கொள்கிறது.

கோலாலம்பூரில் இப்போட்டி நண்பகல் 12 மணிக்கு தொடங்குகிறது.

குருப் -1 பிரிவில் இந்திய அணி ஏற்கனவே அரையிறுதி போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

<<<<<>>>>>

ஹாக்கி இந்தியா லீக் போட்டியின் ஆடவர் பிரிவில் சூர்மா அணி 5-3 என்ற கோல் கணக்கில் வேதாந்தா கலிங்கா அணியை வென்றது.

ரூர்கேலாவில் நடைபெறும் இப்போட்டியின் மற்றொரு ஆட்டத்தில், பெங்கால் அணி – தில்லி அணியை வென்றது.

<<<<<>>>>>